Registered as a Newspaper

பெண்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி: 23628

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ. 1/-

அழகிய கலைநயம் மிக்க
புதுமையான
22 KT
தங்க நகைகளை
ஆடர் செய்து
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஐப்பசி மீ 26 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ரபியு அவ் பிறை 09 (12-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 305

## முகாம் அமைக்க முயன்ற

# இராணுவத்தினரை துரத்தி அடித்தனர் போராளிகள்

## வல்லையில் நடந்த தாக்குதலை இயக்கங்கள் சேர்ந்து முறியடிப்பு

— உதயன் செய்தியாளர்கள்: கே. எஸ். ராஜு, எம். ஜி. லிங்கன் —

அச்சுவேலி, நவம்பர் 12

வல்லைவெளியில் முகாம் அமைக்க முயற்சித்த இராணுவத்தினரை, போராளிகள் கடும் தாக்குதல் நடத்தி துரத்திக் கலைத்தனர்.

நேற்றுக் காலை தொடக்கம் சுமார் பன்னிரண்டு மணி நேரமாக நடந்த கடும் மோதலின் பின்னர் இராணுவத்தினர் தமது முயற்சியைக் கைவிட்டு முகாமுக்குத் திரும்பினர்.

இராணுவத்தினர் நடத்திய விமான, தரைத் தாக்குதல்களில் நான்கு பொதுமக்கள் இறந்தனர். பல வீடுகள் சேதம் அடைந்தன. பலர் காயமடைந்தனர்.

இராணுவத்தினரை எதிர்த்துக் கடுந்தாக்குதல் நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகளோடு தமிழ் ஈழ இராணுவத்தைச் சேர்ந்த போராளிகளும் சேர்ந்து கொண்டனர்.

ஹெலிகொப்டர்கள் போராளிகளை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போதிலும் போராளிகள் சளைக்கவில்லை. தொடர்ந்து கடும் தாக்குதலை நடத்தினர்.

இச்சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:

நேற்று அதிகாலை சுமார் 5-30 மணியில் இருந்து 'சிபிளேன்' வல்லைவெளியைச் சுற்ற வரவுள்ள கிராமங்களாகிய மண்டான், உடுப்பிட்டி, தொண்டமானாறு, அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிகளை அடக்கியவாறு நோட்டமிட்டது.

அதனைத் தொடர்ந்து 6 மணிக்கு ஹெலிக்கொப்டர்இரண்டு வல்லை வெளியை நோக்கி வந்தன.

கரும்புகை நிறமுடையதும், நீலம்-மஞ்சள் நிறமுடையதுமான இரண்டு ஹெலிக்கொப்டர்களில் கரும்புகை நிறமுடைய ஹெலிக்கொப்டரில் வந்த பத்துக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் வல்லை முனியப்பர் கோயிலுக்கும், வல்லை நெசவு நிலையத்துக்கும் இடையில் உள்ள பாலத்துக்கண்மையில் இறக்கிவிடப்பட்டனர்.

ஹெலிக்கொப்டரில் இருந்து கயிற்றில் சிப்பாய்கள் இறங்க, நீலம்-மஞ்சள் நிறமுடைய ஹெலிக்கொப்டர் சுற்றிச் சுற்றிச் சுட்டபடி வட்டமிட்டுப் பறந்தது.

### குழாய்களுக்குப் பின்னால் பதுங்கினர்

இறக்கிவிடப்பட்ட சிப்பாய்கள், மதகு திருத்துவதற்காக பறிக்கப்பட்டிருந்த சிமெந்து குழாய்களை (போக்குகளை) உருட்டி வீதியின் குறுக்காக விட்டு அவற்றின் பின்னால் மறைந்தும், வெளிகளில் படுத்தும் கிடந்தனர்.

இதேநேரம் இரண்டு ஹெலிக்கொப்டர்களும் 50 கலிபர் தாக்குதல்களை வீதிகளை நோக்கி மேற்கொண்டன.

### புலிகள் முன்னேற்றம்

சம்பவத்தை யறிந்த விடுதலைப் புலிகள் நவீன ஆயுதங்களுடன் தளபதி 'கிட்டு' சகிதம் குறிப்பிட்ட இடத்தை நோக்கி முன்னேறினர்.

மிகப் பயங்கரமான சூழலில் பெரும் வெளியில் வீதிக்கரை, மதகுக் கண்களில் பதுங்கியவாறு புலிகள் குறிப்பிட்ட இடத்தை நோக்கி முன்னேறுவதை அவதானித்த ஹெலிக்கொப்டர் மதகுப் பக்கமாக தாக்குதலை ஒரு மணித்தியாலத்துக்குமேல் தொடர்ச்சியாக மேற்கொண்டது.

இதனைத் தொடர்ந்து இறங்கி நின்ற எல்லாச் சிப்பாய்களையும் ஒரு ஹெலிக்கொப்டர்பதிந்து கயிற்றின்மூலம் ஏற்றிச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

### மூர்க்கத் தாக்குதல்

அதனைத் தொடர்ந்து ஆவரங்காலில் இருந்து நாவற்காடூடாகப் பருத்தித்துறை வீதிவழியாகச் சென்றவர்களை நோக்கியும், வீடுகளை நோக்கியும் அடுத்த ஹெலிக்கொப்டர் மூர்க்கத்தனமாகத் தாக்கியது.

இதனால் பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்ததுடன் நான்கு பேர் படுகாயமடைந்தனர்.

பிற்பகல் 5 மணி வரைக்கும் 25க்கும் மேற்பட்ட ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இச் செய்தி மாலை 5 மணிக்கு எழுதப்படும் வரை தொடர்ந்தும் ஷெல் தாக்குதல் நடந்து கொண்டிருந்தது.

போராளிகளும் 50 கலிபர் சகிதம் நவீன ஆயுதங்களுடன் முக்கிய இடங்களில் நின்றனர்.

அடிக்கடி ஏவப்படும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டை முகாம் தொலைபேசி ஏற்படுத்திய பரபரப்பு

யாழ்ப்பாணம், நவ.12

''யாழ். ஆஸ்பத்திரிக்கு அண்மித்த பகுதியில் இருந்துதான் கோட்டை முகாமை நோக்கி மோட்டோர் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்படுகிறது. இதனால் நாமும் எதிர் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது''

இவ்வாறு யாழ் கோட்டை முகாம் உயர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 37 இலங்கைத் தமிழர் கெய்ரோ விமான நிலையத்தில் விசாரணைக்கு தடுத்து வைப்பு

கெய்ரோ, நவ. 12

37 இலங்கைத் தமிழர் நேற்று கெய்ரோ விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டனர்.

டென்மார்க்கில் இருந்து இவர்கள் விமான மூலம் கெய்ரோ வந்து சேர்ந்த போது இவர்கள் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டனர்.

கிரேக்க, டென்மார்க் நாடுகள் இவர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்க மறுத்து விட்டன.

8 டென்மார்க் பாதுகாப்பு அதிகாரிகள் இத் தமிழர்களுடன் கெய்ரோ வந்தனர்.

இத்தகவல்களை மத்திய கிழக்கு செய்திஸ்தாபனம் நேற்று வெளியிட்டது. (இ-எ)

## இன்று பட்ஜட்

கொழும்பு, நவ. 12

நிதி அமைச்சர் ரொனி டி மெல் தனது பத்தாவது வரவு செலவுத் திட்டத்தை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் எதிர் பார்க்கப்படும் சுமார் 3000கோடி ரூபா துண்டு விழும் தொகையை எப்படி நிதி அமைச்சர் நிரப்புவார் என்பது இன்று தெரியவரும். (அ-எ)

## ஹெலி தாக்குதலில் காயம் அடைந்தோர்

பலாலி, நவ. 12

நேற்று வல்லை அச்சுவேலியில் நடத்தப்பட்ட ஹெலிக்கொப்டர் தாக்குதலில் காயமடைந்தவர்கள் விவரம் வரு

(4ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு பயணமானார்

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் நேற்று உடனடியாக விமானம் மூலம் கொழும்புபயணமானார்.

போதனா வைத்திய சாலைகள் அமைச்சிடம் இருந்து வந்த அவசர 'ரெலக்ஸ்' அழைப்பை அடுத்தே இவர்கொழும்பு பயணமானார். (இ-10)

# வடமராட்சிப் பகுதியில் மும்முனைத் தாக்குதல்

## வல்வையில் சிப்பாய்கள் ஐவர் புலிகளிடம் பலி

உதயன் செய்தியாளர்: சி. சுந்தரலிங்கம் —

வல்வெட்டித்துறை, நவ. 12

தொண்டமனாறு இராணுவ முகாம், வல்வை இராணுவ முகாம் ஆகியவற்றுக்கு இடையே இணைப்பு ஒன்றை ஏற்படுத்துமுகமாக முப்படைகள் மேற்கொண்ட மூன்றும் கட்ட மோதலில், ஐந்து சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

நேற்றுக் காலை முதல் மாலை வரை ஆயுதபடையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த உக்கிரமான மோதல் பற்றி அறியவருவதாவது;

நேற்று அதிகாலை 5மணி அளவில் சிவப்பு. வெள்ளை வர்ணம் பூசப்பட்ட வேவு விமானம் ஒன்று வல்வைப் பகுதியை நோட்டமிட்டபடி இருக்க மூன்று ஹெலிக்கொப்டர்களில் இருந்து, வல்வையில் உள்ளபெரிய வீடுகள் மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

அதிசக்தி வாய்ந்த பெரியகுண்டுகளும் வீசப்பட்டன. இதனால் பெரும்பாலான வீடுகள் தரைமட்டமாகின.

### கடலில் இருந்து

இதனைத் தொடர்ந்து கடலில் நிறுத்தப்பட்டு இருந்த ஐந்து பாரிய கடற்படைப் படகுகளில் இருந்து பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் வல்வையின் கரையோர வீடுகள் மோசமாகச் சேதமடைந்தன.

கப்பல்களில் இருந்து கிராமங்களை நோக்கி ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. அதே சமயம் வல்வை, தொண்டமானாறு இராணுவ முகாம்களில் இருந்தும் ஷெல் தாக்குதல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை: ஹெலி, பொம்மர் குண்டு வீச்சு

— உதயன் செய்தியாளர்: பி. ஆர். நாதன் —

பருத்தித்துறை, நவ.12

பருத்தித்துறையில் நேற்று மும்முனைத் தாக்குதல்கள் நடைபெற்றன. நேற்று அதிகாலை 5-45மணி தொடக்கம் இரண்டு ஹெலிக்கொப்டர்களும் ஒரு பொம்மரும் மாறிமாறி மக்கள் செறிந்து வாழும் பகுதிகளைத் தாக்கின.

பருத்தித்துறை, முனை, தும்பளை, வராத்துப்பளை, வல்லிபுரம், ஆத்தியடி, தம்பசெட்டி, மாயக்கை, வியாபாரிமூலை, காந்தியூர், அல்வாய், குரும்பசட்டி, மந்திகை ஆகிய பகுதிகளை நோக்கி ஹெலிக்கொப்டர் தாழப் பறந்து பலமுறை தாக்குதல்களை மேற்கொண்டது.

ஷெல் தாக்குதலில் மரம் அரியும் தொழிலாளியான திகிரி ஒழுங்கையைச் சேர்ந்த எஸ். நாராயணன் (60 வயது) என்பவர் குடல் வெளியே வந்த நிலையில் பலியானார்.

பருத்தித்துறை சிவன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டை முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள்

### நகரில் பதற்றம், கடைகள் மூடப்பட்டன

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ்-கோட்டை முகாமில் இருந்து நேற்று ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பத்துக்கும் மேற்பட்ட ஷெல் குண்டுகள் ஏவப்பட்டன.

மணிக்கூண்டுக் கோபுரம், புல்லுக்குளம், தபாற்கந்தோரின் பின்புறம், கொட்டடிப் பகுதி உட்பட பல இடங்களிலும் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

இத் தாக்குதல்களினால் ஒருவர் காயமடைந்தார்.

ஷெல் தாக்குதல்கள் காரணமாக நேற்று நகரில் உள்ள கடைகள் இழுத்து மூடப்பட்டன.

ஆஸ்பத்திரிக்கு செல்லவென வந்த பார்வையாளர்கள் நேரத்துடன் ஆஸ்பத்திரிக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (இ-10)

## நேற்றிரவும் புலிகள் தொடர்ந்து தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 12

வடமராட்சியை நிர்மூலமாக்க முப்படையினர் எடுக்கும் முயற்சியை முறியடிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்து போராடிக் கொண்டிருந்ததாக நேற்றிரவு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

அறிக்கை விவரம் வருமாறு:

நேற்று குடாநாட்டில் பெரும் இன ஒழிப்பை புரியும் நோக்குடன் சகல இராணுவ முகாம்களிலுமுள்ள இராணுவத்தினர் வெளியேற முயற்சித்தனர்.

கடற்படையினரதும் விமானப்படையினரதும் உதவியுடன் வடமராட்சியிலுள்ள தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை இராணுவ முகாம்கள் பெரும் இன ஒழிப்பை புரிய தற்சமயம் வரை முனைந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



பட்ஜட்டிலை சம்பளம் உயராது எண்டு ரொனி சொல்லிப் போட்டார். அப்ப விலையள், வரியள் தான் உயருமோ...!

## மந்திகை ஆஸ்பத்திரி சேதம் அடைந்தது

பருத்தித்துறை, நவ.12

பருத்தித்துறையில் நேற்று படையினர் நடத்திய தாக்குதல்களின்போது மந்திகை ஆஸ்பத்திரியும் சேதம் அடைந்தது.

மாவட்ட வைத்திய அதிகாரியின் பணிமனை, ஆய்வுகூடப் பகுதி, நலன்புரிச் சங்கத்தின் தேநீர்ச்சாலை ஆகியவை சேதம் அடைந்

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், நவ. 12

நேற்று அச்சுவேலி வல்லைப் பகுதிகளில் நடைபெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதல்களின் போது காயமடைந்து யாழ். பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்போர் விவரம் வருமாறு:

அப்புலிங்கம் - தங்கமணி (32 வயது) கம்பர்மலை

கிட்ணர்-தாஸ் (25 வயது) நீர்வேலி,

நாகையா சுந்தரலிங்கம் (31 வயது) புத்தூர்,

சின்னத்துரை கணேஷ் (23 வயது) வல்வெட்டித்துறை,

செல்வன் மகேந்திரன் (20 வயது) புத்தூர்,

ஏ. சிவராசா, (23 வயது) சிறுப்பிட்டி,

செல்லையா கண்ணன் (22 வயது) அச்சுவேலி,

சி. புவனேஸ்வரி (30 வயது) அச்சுவேலி.

(இ-10)

## சுபநேரம்

12-11-1986
புதன்கிழமை

சுபநேரம்:
4. 36 முதல் 6. 06 வரை

ராகுகாலம்:
12.06 முதல் 1.36 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## சிகரெட் குண்டு!

கொழும்பு, நவ.12

சிகரெட் குண்டு வெடித்து ஒருவர் காயமடைந்தார்

இச்சம்பவம் கம்பஹாவில் இடம்பெற்றது.

காயமடைந்த ஐ. டபிள்யு. ஆர். ஹேமச்சந்திரா கம்பஹா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

வீதியில் கீழே கிடந்த இரண்டு சிகரெட்டுக்களை இவர் கண்டெடுத்தார். ஒன்றைப் புகைக்க எத்தனித்தார்.

சிகரெட் வெடித்து முகத்தில் காயம் ஏற்பட்டது.

கணேமுல்ல ஆயுத படைமுகாம் பொறுப்பதிகாரி லெப்டினன்ட் கேணல் ரத்னாயகா அந்த இடத்துக்கு விஜயம் செய்து பார்வையிட்டார்.

பாவிக்கப்படாத மற்ற சிகரெட்டினுள்ளும் வெடிமருந்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டார்.

இச்சம்பவம் பற்றி விசாரணை நடத்தப்படுகிறது. (இ - எ)

## மருத்துவபீட மாணவர்களும் சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், நவ.12

யாழ் பல்கலைக்கழக மாணவர் விஜிதரன் காணமல் போனதை யிட்டு யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் நடத்தப்படும் போராட்டத்தில் யாழ் மருத்துவ பீட, சித்த மருத்துவபீட மாணவர்களும் நேற்று சேர்ந்து கொண்டனர். (இ - 5)

## ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், நவ. 12

இலங்கை வங்கி கச்சேரி கிளையில் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுக்குரிய நவம்பர் மாதத்திற்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவுகள்; எதிர்வரும் சனி, திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் கோட்டைக் கொடுப்பனவுக் காரியாலயத்தில் நடைபெறும்.

இக் கொடுப்பனவுகள் காலை 9 மணியிலிருந்து பி. ப. 1 மணிவரை வழங்கப்படும் என்று யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. கா. இராமநாதர் அறிவித்துள்ளார்.

15-11-86(சனி) சிவில், ஆசிரியர் ஓய்வூதியம் பெறுவோர் சகலருக்கும்.

17-11-86 (திங்கள்) விதவைகள் ஓய்வூதியம்.

18-11-86 (செவ்வாய்) ஆசிரியர் விதவைகள், படைக்கல சேவிதர்கள், அவர்களின் விதவைகள் ஆகிய மற்றையோருக்கான ஓய்வூதியம். (இ-5)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய வீடமைப்பு அதிகார சபையின்

# மேசன், தச்சுத் தொழில் பயிற்சி கிளிநொச்சிக்கும் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.12 தேசியவீடமைப்பு அதிகாரசபையின் பத்துலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தின் உபதிட்டமான மேசன்– தச்சுத்தொழில் பயிற்சி வழங்கும் திட்டத்தை கிளிநொச்சி மாவட்டத்தில் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி, பளை, பூநகரி ஆகிய பகுதி உதவி அரச அதிபர் பிரிவுகளில் இருந்து ஆர்வம் உள்ள இளைஞர்களை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முதலாம் கட்டப்பயிற்சி கிளிநொச்சியில் அளிக்கப்படும். இதில் திறமை காட்டுபவர்களுக்கு இரண்டாம் கட்டப் பயிற்சி யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் அளிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

முதலாம் கட்டப்பயிற்சியைப் பூர்த்தி செய்யும் பயிலுநருக்கு சலுகை விலையில் உபகரணத் தொகுதிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அத்தோடு பயிற்சி பெறுபவருக்கு பாடத் திட்ட வழிகாட்டி நூல்கள் இலவசமாக வழங்கப்படும்.

இப்பயிற்சித் திட்டத்தின் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர்கள் பெரிதும் பயன் அடைய வழியுண்டு — இப்படி மாவட்ட முகாமையாளர் திரு, யோசெப் மரியான் தேரிவித்தார்.

1975 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை கிளிநொச்சி மாவட்டத்தில் 32 இளைஞர்களுக்கு தச்சு பயிற்சியும் 28 பேருக்கு மேசன் பயிற்சியும் வழங்கப்பட்டன

(இ–எ)

## கவிக்குயில்கள் கவிதைகள் அறிமுக விழா

சுன்னுகம், நவ. 12 கவிஞர் துரையின் கவிக்குயில்கள் கவிதைகள் ஒலிப்பதிவு நூல் அறிமுக விழா நாளை வியாழக்கிழமை நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

வடமாகாண கல்வி அதிகாரி திரு. வே. க. நாகராசா தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் சிறப்புரை வழங்க பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் அழைக்கப்பட்டுள்ளார்.

சங்கீத பூஷணம் கே. பரமேஸ்வரனின் இசை நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

(இ-27)

## புலிகளின் கப்டன் வீர மரணம்

யாழ்ப்பாணம், நவ. 12 கடந்த திங்கட்கிழமை காலை 10 மணியளவில் கல்லடி நாவற்குடா பகுதியில் நடந்து சென்ற தமிழீழ விடுதலைப் புலி இயக்கப் போராளிகளை அதிரடிப் படை பொலீஸார் சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்தினர்.

இம்மோதலில் புலிகள் கப்டன் ஹரன் வீர மரணம் அடைந்தார்.

இவர் கல்லடியைச் சேர்ந்தவர்.

கப்டன் ஹரனின் மறைவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வீர வணக்கம் செலுத்தி அறிக்கை வெளியிட்டுள்ளது. (இ-எ)

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ 12 ஞாயிற்றுக்கிழமை இரவு கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள்மேற் கொள்ளப்பட்டன.

திருநகர், ஜெயந்தி நகர் ஆகிய பகுதிகளை நோக்கி இந்த ஷெல் குண்டுகள் ஏவப்பட்டன,

நள்ளிரவு நேரத்தில் மேற் கொள்ளப்பட்ட இந்த ஷெல் தாக்குதல் காரணமாக இப் பகுதி மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி இருந்தனர். (இ-10)

## சைவ இலக்கிய விழாவும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,நவ.12 ஏழாலை சைவமகாஜன வித்தியாலயத்தின் சைவ இலக்கிய விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை காலை நடைபெறும்.

அதிபர் திரு. வி. த. திருநாவுக்கரசு தலைமை வகிப்பார்.

சைவ இலக்கிய விழாவில் பண்டிதர் கா. நமசிவாயம், சைவப் புலவர் ச. செல்லத்துரை, பண்டிதை சிவபாக்கியம், திரு. நாவேந்தன், சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு ஆகியோர் உரையாற்றுவர்.

பரிசளிப்பு விழாவுக்கு பிரதம விருந்தினர்களாக பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் மாவட்ட அபிவிருத்திச் சபை உதவிச் செயலாளர் திரு. எஸ். பரமநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக திரு. க. சிவமகாராசா, சி. குமரவேல். திரு. ஆ தம்பித்துரை ஆகியோர் கலந்துகொள்வர்.

நிறுவுநர் நினைவுரையை கலாநிதி நா சுப்பிரமணிய ஐயர் நிகழ்த்துவார். (இ – எ)

விளையாட்டரங்கு

## ஒஸ்மானியா வெற்றி

யாழ்ப்பாணம், நவ 12 யாழ்ப்பாணப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட 15 வயதுக்குட்பட்ட குழுவினரின் கால் இறுதிப் போட்டியில் ஒஸ்மானியாக் கல்லூரி 2–0 கோல்களால் யாழ் இந்துக் கல்லூரியைத் தோற்கடித்தது

இப்போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஒஸ்மானியாக் கல்லூரியின் சார்பில் எம். ஏ.சி. எம். ஜிகாஸ், எஸ்.எச். ஜெக்கீன் ஆகியோர் தலா ஒரு கோல் போட்டனர்.

இப்போட்டியில்வெற்றி பெற்றதன் மூலம் ஒஸ்மானியாக் கல்லூரி அரை இறுதி ஆட்டத்திற்குத் தெரிவாகி உள்ளது.

அரை இறுதி ஆட்டத்தில் ஒஸ்மானியாக் கல்லூரி கொக்குவில் இந்துக் கல்லூரியுடன் மோதும். (இ)

## பத்தாயிரம் ஹெக்டர் காலபோக நெற்செய்கை யாழ். மாவட்டத்தில் பாதிப்பு

யாழ்ப்பாணம்; நவம்பர் 12 யாழ் மாவட்டத்தில் இம்முறை பத்தாயிரம் ஹெக்டர் காலபோக நெற்செய்கை பாதிப்படைந்துள்ளது என பயிர்ச்செய்கை உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

காலம் தவறிப் பெய்த மழையே இதற்கு காரணம்.

வட்டுக்கோட்டை, அராலி, சங்கானை பகுதிகளிலுள்ள நெற்பயிர்ச் செய்கையே அதிகம் பாதிப்படைந்துள்ளது என்றும் அவர் சொன்னார். (இ–5)

## கல்வித் துறையில் மட்டுமல்ல விளையாட்டுத் துறையிலும் சாதனை வேண்டும்

புங்குடுதீவு, நவ. 12 மாணவர்கள் கல்வித் துறையில் மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் புதிய சாதனைகளை நிலை நாட்ட வேண்டும். ஆசிரியர்கள் அதற்கு ஊக்கமூட்டவேண்டும்.

இவ்வாறு கூறினார் புங்குடுதீவு கொத்தணி அதிபர் திரு. இ. ச. செல்லத்துரை.

புங்குடுதீவு கொத்தணிப்பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற 18 வயதுக் குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சம்பியன் ஸ்தானத்தைப் பெற்ற ஸ்ரீகணேச மகா வித்தியாசாலை உதைபந்தாட்ட அணியினரைப் பாராட்டும்வைபவமொன்று நடைபெற்றது.

இப்பாராட்டு வைபவத்தில் பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு பேசுகையிலேயே திரு. செல்லத்துரை மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலயம் கல்வித் துறையிலும் விளையாட்டுத் துறையிலும் ஈட்டி வரும் வெற்றிகள் புங்குடுதீவு (4ஆம் பக்கம் பார்க்க)

## லயன்ஸ் கழகம் அமைக்க முடிவு

யாழ்ப்பாணம், நவ. 12 அளவெட்டி, ஏழாலை, சுன்னுகம் பகுதிகளை உள்ளடக்கிய லயன்ஸ் கழகம் ஒன்றை அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் அண்மையில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திருசு ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தாபகர் திரு. முத்துக்குமாரசாமி, கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் திரு. செல்வரத்தினம், செயலாளர் திரு சண்முகநாதன்ஆகியோர் சமுகம் அளித்து இருந்தனர்.

சட்டத்தரணி சிவ. ஸ்ரீதரன் கூட்ட ஒழுங்குகளைச் செய்ய முன்வந்தார்.

இதுசம்பந்தமான பூர்வாங்கக்கூட்டம் டிசம்பர் 6ஆம் திகதி நடத்துவது என்று முடிவாகியது. (இ-எ)

## வட்டக்கச்சி வித்தியாலயத்தில் 15 பேர் சித்தி

யாழ்ப்பாணம், நவ. 12 கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் ஜீ. சி. ஈ (உயர்தரம்) பரீட்சைக்கு தோற்றிய 18 பேரில் 15 பேர் பூரண சித்தி பெற்றுள்ளனர்.

செல்வி. சர்வகலாதேவி சிவகுரு என்ற மாணவி ஒரு பாடத்தில் அதி விஷேச சித்திபெற்றுள்ளார்.

திறமையாக சித்தி அடைந்தவர்கள் விவரம் வருமாறு:

செல்வி.சர்வகலாதேவி சிவகுரு(ஏ. பி. சி. எஸ்) செல்வி. பெனடிற்று மாலினி (2பி. சி. எஸ்) செல்வி. சத்தியவதனி (2 பி. சி. எஸ்), செல்வி. புஷ்பராணி. (2 பி. சி. எஸ்),செல்வன்.ஈஸ்வரன் (பி. 2சி.எஸ்), செல்வி. கிரிஜா (பி. 2சி. எஸ்) செல்வி. கா, வடிவாம்பிகை(பி. சி. 2எஸ்)

இதனை வட்டக்கச்சி மகாவித்தியாலய அதிபர் திரு. கே. சாம்பசிவம் தெரிவித்தார்.(ஒ)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்


## பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி ● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்புவோரை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். இம் மாதம் 15ம் திகதி செல்லவுள்ள பயணத்தில் பதிவு செய்தோரும் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு கட்டிட பகுதி Laboures ஆக செல்ல விரும்புவோர் 14ம் திகதிக்கு முன்பதாக பாஸ்போட், 6 படம் ஆகியவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும்

குவைத்திற்கு பாஸ்போட் கொடுத்தவர்கள் 15ஆம் திகதிக்கு முன் தொடர் கொள்ளவும்.

தொடர்பு:
N.பாலா
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

* தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஓமேகா ரவல்ஸ்&ரூர்ஸ் வங்களாவடி சந்தியில் நிறுவப் பட்டுள்ளது.

* எமது கிளை நிறுவனம் ஓமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் எனும் பெயரில் குப்பிளான் சந்தியிலும் நிறுவப்பட்டுள்ளது.


மக்களை

## சித்திரவதை செய்ய பொலீஸாருக்கு அதிகாரமில்லை

### பிரதிப் பொலீஸ் மா அதிபர் கூறுகிறார்

கொழும்பு, நவ 12 மக்களைச் சித்திரவதை செய்யப் பொலீஸாருக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது இந்த முக்கிய உண்மையை உணர்ந்து மக்களைச் சித்திரவதை செய்வதைப் பொலீஸார் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இப்படி பொலீஸ் பயிற்சிக்குப் பொறுப்பான பிரதி மா அதிபர் மித்ரா ஆரியசிங்க தெரிவித்தார்.

கண்டி பொலீஸ் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் பிரதிப் பொலீஸ் மாஅதிபர் திரு. ஆரியசிங்க மேலும் சொன்னதாவது;

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. அரசமைப்புச் சட்டம் ஒன்று இருக்கிறது. இதன்கீழ் சித்திரவதையில் இருந்து பாதுகாக்கப்படும் உரிமை மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அரசியல், சட்டரீதியில் வழங்கப்பட்டுள்ள உரிமையை மறுக்கும் அதிகாரம் எவருக்கும் கிடையாது.

அப்படிச் சித்திரவதை செய்யப்படுவதை எதிர்த்து நீதிமன்றம் செல்லும் உரிமை மக்களுக்கு உண்டு. மக்களைச் சித்திரவதை செய்ய வேண்டிய தேவையும்பொலீஸாருக்கு இல்லை,

இப்படி பிரதி பொலீஸ் மா அதிபர் திரு. மித்ரா ஆரியசிங்க தெரிவித்தார். (இ–எ)

## தையல் பயிற்சி நிலையம்

சுன்னுகம், நவ. 12 சுன்னுகம் மயிலணி வடக்கு ஜனசக்தி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தையல் பயிற்சி நிலையத்தை இன்று புதன் கிழமை ஆரம்பிக்கின்றனர்.

வலி. தெற்கு உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் இன்று காலை 10–00 மணிக்கு பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து வைப்பார். (இ-27)

## புங்குடுதீவில்

புங்குடுதீவு, நவ.12 புங்குடுதீவு வட்டாரப் பாடசாலைகளில் அடுத்த வருடம் மூன்றும் ஆண்டில் கல்வி கற்பிக்கவிருக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு கடந்த 5ஆம் திகதி புதன்கிழமை காலை புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணியமகளிர் வித்தியாலயத்தில்ஆரம்பமானது.

புங்குடுதீவு கொத்தணிப்பாடசாலை அதிபர் திரு. இ. ச. செல்லத்துரை இப்பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்தார். (இ–76)

மக்கள் முகம்



## ஓய்வு பெறுகிறார்

மட்டக்களப்பு, நவ. 12 மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றும் டாக்டர் என். ஏ. ரி. பொன்னுச்சாமி தனது 36 வருட அரச சேவையிலிருந்து 57ஆவது வயதில் ஓய்வு பெறுகிறார்.

1950 ஆம் ஆண்டு வைத்திய சேவையில் முதல் நியமனத்தைக் கல்முனை நடமாடும் வைத்தியசாலையில் பெற்றார். அதனைத் தொடர்ந்து நுவரெரெலியா, அனுராதபுரம், கண்டி, கேகாலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தனது சேவையைப் புரிந்தார்.

சமய, சமூக நடவடிக்கையில் ஈடுபாடு கொண்ட இவர் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி வைரவர் ஆலயம், காட்டுக்கஸ்திகிலிய பிள்ளையார் ஆலயம் அமைப்பதில் முழு மூச்சாகச் செயல்பட்டார். மாந்தீவு தொழு நோயாளர் ஆஸ்பத்திரி முருகன் ஆலயப் புனரமைப்பிலும் முக்கிய பங்கு வகித்தார்.

வல்வெட்டித்துறை வாசியும் சிதம்பரக் கல்லூரி பழைய மாணவருமான இவர் ஓய்வு பெற்ற பின்பு ஆஸ்திரேலியா பயணமாகவுள்ளார். (இ–21)

நீத்தார் பட்டியல்

## திருமதி. கனகம்மா ஆறுமுகம்

புங்குடுதிவு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி கனகம்மா ஆறுமுகம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு. வீ. ஆறுமுகம், (அஞ்சலகம், புங்குடுதீவு) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி பத்மாவதி முதலித்தம்பி, காலஞ்சென்ற திருமதி தையல்நாயகி சின்னத்துரை, காலஞ்சென்ற பரநிருபசிங்கம் (முன்னாள் முகாமையாளர், வவுனியா தெற்கு, ப,நோ கூ. சங்கம்), காராளபிள்ளை (அஞ்சலகம், புங்குடுதீவு), அரியரெத்தினம் (புகையிரத தலைமைப் பாதுகாவலர், அனுராதபுரம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், முதலித்தம்பி (வர்த்தகர், முல்லைத்தீவு), சின்னத்துரை (வர்த்தகர், ஓமந்தை), கமலாதேவி (ஆசிரியை), மங்கையர்க்கரசி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (மலாயன் பென்சனியர்) காலஞ்சென்ற ஆறுமுகம் (மலாயன் பென்சனியர்) காலஞ்சென்ற திருமதி காதலிப்பிள்ளை அம்பலவாணர் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 1986–11-12 இன்று புதன்கிழமை காலை 11 மணியளவில் புங்குடுதீவு மணற்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்!
ஆ. காராளபிள்ளை


## விற்பனைக்கு

உயரமான மரங்களுக்கு நிலத்திலிருந்தபடி மருந்து தெளிக்கக்கூடிய அதிவலுவுள்ள என்ஜின் பொருத்திய தெளிகருவி விற்பனைக்குள்ளது. அலுவலக நேரங்களில் மட்டும் பார்வையிடலாம்

இல. 10,குறெசெற் ஒழுங்கை, சுண்டுக்குளி.
(கச்சேரியில் இருந்து 100 யார்)



★ பாஸ்போட் ★ பொண்ட் ★ விசா

★ உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

★ யாழ். - கொழும்பு பஸ் பிரயாணச் சேவைக்கு முன்கூட்டியே ஆசனம் பதிவு செய்யலாம்.

★ பிரயாணிகளுக்கு தங்குமிட வசதியும் செய்து தரப்படும்.

சர்வதேச தொலைத் தொடர்பு சேவைக்கு

நிப்பொன் ரெலிரவல்ஸ்

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

அன்பாக இரு. ஆனால் அடிமையாக இராதே.

ஸ்ரீ ஞானனந்தகிரி சுவாமிகள்

உதயன்

இல. 15, 2வது ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073

12-11-1986 த. பெ. இல.23

## மித்ராவின் மனிதப் பண்பு

பிரதிப் பொலீஸ் மா அதிபர் திரு. மித்ரா ஆரியசிங்கா கண்டியில் ஆற்றிய உரை ஒன்று எமது கருத்தைக் கவர்ந்துள்ளது. அஸ்கிரிய பொலீஸ் பயிற்சி நிலையத்தில் அவர் உரையாற்றி இருக்கிறார்.

மக்களைச் சித்திரவதை செய்வதற்குப் பொலீஸாருக்கு எந்தவித உரிமையும் கிடையாது. பொலீஸ் அதிகாரிகளும் பொலீஸாரும் இந்தப் பிரதான விடயத்தை அறிந்து, உணர்ந்து எவரையும் சித்திரவதை செய்யக் கூடாது.

இவ்வாறு திரு. மித்ரா ஆரியசிங்கா தமது அதிகாரிகளுக்கும் கீழ்மட்டத்தினருக்கும் அறிவுரை வழங்கி இருக்கிறார்.

ஸ்ரீலங்கா ஒரு ஜனநாயக நாடு. அது அரசமைப்புச்சட்டம் ஒன்றின் மூலம் ஆளப்படும் நாடு. சித்திரவதை செய்யப்படுவதில் இருந்து மக்களைப் பார்துகாப்பதற்கு அரசமைப்புச் சட்டம் வகை செய்கிறது எனவே பொலீஸாருக்கோ அல்லது பொலீஸ் அதிகாரிகளுக்கோ மக்களைச் சித்திரவதை செய்யும் உரிமை இல்லை. இவ்வாறு அழுத்தம் திருத்தமாகத் திரு. மித்ரா விளங்க வைத்துள்ளார்.

தடுப்புக் காவலில் உள்ளவர்களையும், விசாரணைக்கு உட்படுத்தப்படுபவர்களையும் பொலீஸார் சித்திரவதை செய்வது பகிரங்க இரகசியம். சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து உண்மையைக் கறந்து எடுப்பதற்காகவே தாம் அவ்வாறு செய்வதாகப் பொலீஸார் உத்தியோகப்பற்றற்ற முறையில் சொல்லிக்கொள்வது உண்டு.

பல சந்தர்ப்பங்களில், பொலீஸார் தமது அதிகாரத்தனத்தைக் காட்டுவதற்காகவும் பழி வாங்குவதற்காகவும் கைது செய்வோரைத் தாக்கியும், சித்திரவதை செய்தும் இம்சைப்படுத்துவது சர்வசாதாரணம்.

ஆனால் என்ன காரணத்துக்காகவும் மக்களைச் சித்திரவதை செய்வதற்குப் பொலீஸாருக்கு அதிகாரம் இல்லை; உரிமையும் கிடையாது. அப்படிச் செய்வோர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து நீதி கேட்பதற்கும் மக்களுக்கு உரிமை உண்டு.

எனினும் சித்திரவதைக் குற்றச்சாட்டோடு பொலீஸாருக்கு எதிராக வழக்குத் தொடரப்படுவது மிகவும் குறைவு. கைது செய்யப்படுவோரை சித்திரவதை செய்வதற்கான அத்தாட்சிகளையும், சாட்சிகளையும் கண்டு பிடிப்பது கஷ்டம். பொலீஸாரே அதற்குத் தடையாக இருப்பதுண்டு.

பொலீஸார் செய்யும் சித்திரவதை குறித்துப் பிரஸ்தாபிக்கும் வேளை, இராணுவத்தினரும் மற்றும் ஆயுதப் படையினரும் தமிழ் இளைஞர்களை சித்திரவதை செய்வது நினைவிற்கு வராமல் இருக்க முடியாது.

முகாம்களில் படையினர் தமிழ் இளைஞர் மீது நடத்தும் சித்திரவதைகளை பொலீஸாரின் சித்திரவதைகளுடன் ஒப்பிட முடியாது. படை முகாம்களில் நடக்கும் சித்திரவதைகள் பல மடங்கு அநியாயமானவை. முழுக்க முழுக்கக் காட்டுமிராண்டித் தனமானவை; அநாகரிகமானவை.

பொலீஸார் சித்திரவதை செய்வது எப்படித் திரு. மித்ராவுக்குத் தெரிய வந்ததோ அதே போல படைமுகாம்களில் நடக்கும் மிருகத்தனங்கள் படை உயர் அதிகாரிகளுக்கும் தெரிய வராமல் இருக்க நியாயமில்லை. உயர் அதிகாரிகளின் பணிப்பின் பேரில்தான் அனேகமாக அக்கிரமச் சித்திரவதைகள் நடப்பதாகவும் இருக்கலாம் அல்லவா?

மக்களைச் சித்திரவதை செய்யும் உரிமை பொலீஸாருக்கு இல்லையானல், ஆயுதப்படையினருக்கு உண்டா? அவர்களுக்கு மட்டும் அந்த உரிமையை அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ளதா?

திரு. மித்ரா போன்ற நியாய சிந்தை உள்ள, மனித தர்மம் புரிந்த, மானிடப் பண்பு நிறைந்த உயர் அதிகாரிகள் ஆயுதப் படைகளில் இல்லையா?

நாட்டின் குழப்ப நிலையை நீக்குவதற்கு, நிரந்தர சமாதானத்தை உண்டாக்குவதற்கு ஆன்மீக சக்தி தான் உதவி செய்யும். இப்படிச் சமய தத்துவம் பேசும் பிரிகேடியர் ஜோர்ஜ் பெர்ணண்டோ போன்றவர்கள் சித்திரவதைக்கு எதிராகக் குரல் கொடுக்கக் கூடாதா?

எதிரியுடன் போர் புரிவது வேறு. எதிரியைப் பழிவாங்குவது அல்லது சித்திரவதை செய்வது வேறு. அது யுத்தப் பண்புமல்ல இதனை ஆயுதப்படை உயர் அதிகாரிகளும், அரச கட்டிலில் உள்ளவர்களும் உணர வேண்டும்.

அதர்மம் நீண்ட காலத்திற்கு வெற்றி கொள்ளாது. தர்மம் தான் நிரந்தரமாக வெல்லும் என்பதை அரச உயர்மட்டம் உணர்வது எப்போதோ...?

# சிரியாவுக்கு ஆயுத விற்பனை தடை

## ஐரோப்பிய பொருளாதார சமூக அமைப்பு தீர்மானம்

லண்டன், நவ. 11

சிரியாவுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதில்லை என்று ஐரோப்பிய பொருளாதார சமூக அமைப்பைச் சேர்ந்த நாடுகள் முடிவு செய்துள்ளன.

லண்டனில் இஸ்ரேவல் விமானம் ஒன்றை குண்டு வைத்துத் தகர்க்க சிரிய இராஜ தந்திரிகள் முயற்சித்த சம்பவத்திற்கு பதில் நடவடிக்கையாக இந்த முடிவை ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் எடுத்துள்ளன.

லண்டனில் நடைபெற்ற இந்த நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சிரியாவின் ராஜ தந்திரிகளின் நடமாட்டங்களைக் கண்காணிப்பது, சிரிய விமானசேவையைக் கட்டுப்படுத்துவது ஆகிய நடவடிக்கைகளையும் இந்த நாடுகள் எடுத்துள்ளன.

சிரியா மீது பொருளாதாரத்தடைகள்மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பிரிட்டன், இந்த நாடுகளை கேட்டிருந்தது. இதனை லிபியா பலமாக எதிர்த்து இருந்தது.

### மதுரையில் வானொலிக் குண்டு

மதுரை, நவ.11

டிரான்ஸிஸ்டர் வானொலிப் பெட்டி இருந்த பார்சல் வெடித்து மூன்று பேர் காயமடைந்தனர்.

மதுரையில் இருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கீழடி கிராமத்தில் அண்மையில் இச்சம்பவம் இடம் பெற்றது.

திருபுவனம் பொலீஸார் இது பற்றி விசாரணை நடத்து கின்றனர். (இ-எ)

### காஞ்சி காமகோடி மதுரா விஜயம்

மதுரா, நவ. 11

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திரப் சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் உத்தர பிரதேசத்தில் உள்ள மதுராவுக்கு விஜயம் செய்தார். (-எ)

### மொசாம்பிக்கை ஸிம்பாப்வே பாதுகாக்கும்

ஹராரே, நவ 11

கடைசிமனிதன் உயிருடன் இருக்கும் வரை மொஸாம்பிக் நாட்டைப் பாதுகாக்க ஸிம்பாப்வே போராடும்.

இப்படி ஸிம்பாப்வே பிரதமர் ரொபர்ட் முகாபே பிரதிக்ஞை எடுத்துள்ளார்.

தென்ஆபிரிக்க ஆதரவுபெற்ற கிளர்ச்சிக்காரர்கள் மொஸாம்பிக் நாட்டின்அதிகாரத்தைக் கைப்பற்ற கெரில்லா யுத்தம் நடத்தி வருகின்றனர்.

அண்மையில் விமான விபத்து ஒன்றில் உயிரிழந்த மொஸாம்பிக் அதிபர் சமோரா மாஷெல்லின் நினைவு தினக்கூட்டத்தில் பேசுகையில் பிரதமர்முகாபே மேற்கண்ட பிரதிக்ஞையை எடுத்தார். (இ-எ)

### "உங்களைக் கொல்ல முன் அவர்களைக் கொல்லுங்கள்"

சண்டிகார், நவம்பர் 11

சீக்கியத் தீவிரவாதிகள் உங்களைக் கொல்லும் முன்னர் நீங்கள் அவர்களைக் கொல்லுங்கள்.

இப்படி பஞ்சாப் பொலீஸாருக்கு பொலீஸ் மா அதிபர் ஜூலியோ ரிபேரோ தெரிவித்திருக்கிறார்.

"பஞ்சாப் மாநிலத்தில் தாக்கல் செய்யப்பட்ட எந்த வழக்கிலும் தீவிரவாதி எவரும் குற்றவாளியாகக் காணப்படவில்லை. சில இடங்களில் தீவிரவாதிகள் சாட்சிகளைக் கொன்று விடுகின்றார்கள். சில சமயம் வழக்கு நடத்துநர்களைக் கொலை செய்து விடுகின்றார்கள். சில சமயங்களில் நீதிபதிகளையே கொன்று விடுகின்றார்கள்"— இப்படி பொலீஸ் மா அதிபர் சொன்னார். (இ-எ)

### பங்களாதேஷில் இராணுவ ஆட்சி நீக்கம்

டாக்கா, நவ. 11

பங்களாதேஷில் கடந்த திங்கள் முதல் இராணுவ ஆட்சி நீக்கப்பட்டது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனதிபதியாக திரு. எர்ஷாத் பதவி ஏற்றதைத் தொடர்ந்து மீண்டும் ஜனநாயக நிர்வாகம் பங்களாதேஷில் அமுலுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதனிடையில் இராணுவ ஆட்சி இருந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாகச் சட்ட நடவடிக்கை எடுப்பதைத் தடுக்கும் சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து சிவில் நிர்வாகம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. (அ-எ)

### சிரியாவுக்கு எதிராக பொருளாதார தடைவிதித்தால்

# அரபு நாடு நடவடிக்கை எடுக்கும் என லிபியா எச்சரிக்கை

திரிபோலி, நவ. 11

சிரியாவுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராக அரபு நாடுகள் கடும் நடவடிக்கை எடுக்கும் என்று லிபியா எச்சரித்து உள்ளது.

லண்டனில் வைத்து இஸ்ரவேல் விமானம் ஒன்றைக் குண்டு வைத்துத்தகர்க்க சிரிய இராஜ தந்திரிகள் முயன்ற ஒரு சம்பவத்தில் ஈடுபட்டது தொடர்பாக சிரியா மீது பொருளாதாரத்தடை விதிக்கும்படி பிரிட்டன், ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளைக் கோரியுள்ளது.

அதுபற்றி ஆலோசிக்க இந்த நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் லண்டனில் கூடி முடிவெடுப்பதாக இருந்தது.

இந்த நிலையிலேயே தான் லிபியாவின் எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

ஐரோப்பிய பொருளாதார நாடுகளின் தூதர்களை வரவழைத்து லிபிய வெளிநாட்டமைச்சு இந்த எச்சரிக்கையை விடுத்தது.

சிரியா மீது பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டால் ஐரோப்பிய நாடுகளில் உள்ள முதலீடுகள், சொத்துக்களை அரபு நாடுகள் வாபஸ் வாங்கும்; இந்த நாடுகளில் இருந்து தங்கம் வாங்குவதையும் அரபு நாடுகள் நிறுத்திக்கொள்ளும்—

இதுவே லிபியாவின் எச்சரிக்கை. (இ-எ)

### நாடாளுமன்ற விவாதங்கள்: அ. தி. மு. க. எம். பிக்கள் எப்படி நடந்து கொள்வர்?

சென்னை, நவ.11

தற்சமயம் புதுடில்லியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் விஷயங்கள் குறித்து அண்ணா தி.மு.க. எம்.பிக்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

இது குறித்து தமிழக முதல் எம். ஜி. இராமச்சந்திரன் அ.தி.மு.க எம்.பிக்களுடன் அண்மையில் கலந்துரையாடினர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை, காவேரி நீர்த் தகராறு ஆகியன பற்றியே ஆலோசனை நடத்தப்பட்டன. (இ-எ)

### வெளி உலகில்

## பயங்கரவாதிகளுடன் தொடர்புவைக்க முடியாது என்கிறார் அதிபர் றேகன்

வாஷிங்டன், நவ. 11

எந்தக் கட்டத்திலும் பயங்கரவாதிகளுடன் அமெரிக்கா நேரடிமறைமுகத் தொடர்புகளை வைக்காது.

இப்படி அமெரிக்க அதிபர் றேகன், தனது சிரேஷ்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறார்.

இத்தகவலை வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஒருவர் வெளியிட்டார்.

ஈரானில் பயணக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள இரண்டு அமெரிக்கர்களையும் விடுவிப்பது குறித்து இரகசிய நடவடிக்கைகளில் அமெரிக்க அரசு ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுவதைத் தொடர்ந்தே. அதிபர் றேகன் மேற்கண்ட உறுதியை வெளியிட்டிருக்கிறார். (இ-எ)

# ஆத்மீக பலம் மூலமே நிரந்தர சமாதானம்

## பிரிகேடியர் பெர்ணண்டோ கூறுகிறார்

கொழும்பு, நவ. 12

ஆத்மீகபலத்தை வளர்ப்பதன் மூலம்தான் நிரந்தர சமாதானத்தை நாம் அடையமுடியும்.

இலங்கை இராணுவத்தின் இராணுவத்துறைச் செயலாளரான பிரிகேடியர் ஜோர்ஜ் பெர்ணண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுமார் 300 இளைஞர் கலந்துகொண்ட கருத்தரங்கு ஒன்றை பொரலஸ்கமுவ லியோ கழகம் ஒழுங்கு செய்திருந்தது.

அதில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் மேலும் சொன்னதாவது;

நாம் பிரச்சினையின் மத்தியில் இருக்கிறோம். எப்படியான பிரச்சினை என்பது சிலருக்குத் தெரியசது. சிலர் ஆச்சரியப்படுகின்றனர். என்ன செய்வது என்று தெரியாமல் சிலர் உள்ளனர்.

இலங்கைமீது புயல் ஒன்று உருவாகியுள்ளது. சொர்க்கத்தீவில் குழப்பம் நிலவுகிறது.

பிரச்சினையின் அறிகுறிதான் இனரீதியான மோதல். பத்திரிகைகளைப் பாருங்கள். கொலை, கொள்ளை, தீவைப்பு செய்திகளாகவே உள்ளன.

பிறந்த குழந்தையின் அழுகுரல், மரணவேதனையில் உள்ள மனிதனின் அழுகுரலுடன் கலந்து விடுகிறது.

என்ன இடம்பெறுகிறது என்பதைக்கூட நாம் உணர முடியாத நிலையில் உள்ளோமா? இதயம் மூடிகொண்டு விட்டதா?

கண்கள் இருந்தும் பார்க்க முடியாதுள்ளோம் காதுகள் இருந்தும் கேட்கமுடியாதிருக்கிறோம். மற்றவரின் வேதனையை உணரமுடியாதுள்ளோம்.

இந்த வேதனையில் இருந்து யாரால் எம்மைக் காப்பாற்றமுடியும்?

அரசியல் சக்தி எம்மைக் காப்பாற்றுமா? அல்லது இராணுவ வலிமை எம்மைக் காப்பாற்றுமா? அமைதிப் பேச்சுக்கள்தான் எம்மைக் காப்பாற்றுமா?

இவை எதுவும் எமக்கு நிரந்தர அமைதியைத் தரா.

ஒரே ஒரு சக்திதான் எமக்கு நிரந்தர சமாதானத்தையும் நல்ல புத்தியையும் தரும். அந்தச் சக்திதான் ஆத்மீக பலம். அதை வளர்ப்போம்,

இப்படி பிரிகேடியர் ஜோர்ஜ் பெர்ணண்டோ சொன்னார். (இ-எ)

# மீலாத் விழா

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ்ப்பாணப் மஸ்றஉத்தீன் த. க பாடசாலையில் 15 ஆம் திகதி மீலாத் விழா கொண்டாடப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் ஜனப். எம். எஸ். எம். சிகாப்தீன் தலைமையில் நடைபெறும் இவ்வுழாவிற்குஅல்ஹாஜ் குவாஸி எம். எம். எஸ். அப்துல் காதர் பிரதம விருந்தினராகவும் வட்டாரக் கல்வியதிகாரி திரு. இ. சிவானந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஒழுங்கு செய்துள்ள இவ்விழாவில் பாடசாலை மாணவரின் நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன, (இ-5)



**பொய்யாமொழி**

**குறள்:**

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

**பொருள்:**

ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொள் [illegible] வேண்டும்; காக்காவிட்டால் சினம் தன்னையே அழித்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம் வரும் வரை பாதுகாப்புச் செலவீனங்களை குறைக்க முடியாது

## ரொனி கூறுகிறார்

கொழும்பு, நவ. 12

சமாதானம் வரும் வரை பாதுகாப்புச் செலவீனத்தைக் குறைக்க முடியாது.

இப்படிச் சொன்னார் நிதி அமைச்சர் ரொனி டி மெல்.

இன்று தமது பத்தாவது வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கப் போகும் நிதி அமைச்சர் ரொனி டி மெல், 'ஏற்கனவே சமர்ப்பித்த 9 வரவுசெலவுத் திட்டங்களிலும் பார்க்க பத்தாவது வரவுசெலவுத் திட்டம் தான் சிக்கலானது'— என்று சொன்னார்.

'வரி விதிப்புக்கும் ஓர் எல்லையுண்டு. மக்கள் மேல் சுமையை ஏற்ற முடியாது.

பண நோட்டுத்தான் அச்சடிக்க வேண்டும். அப்படிச் செய்தால் பண வீக்கம் ஏற்படும். அதிகரித்து வரும் பாதுகாப் செலவீனத்தினுல் பண வீக்கம் 7 சத வீதம் அதிகரித்து விட்டது'.

இப்படி அமைச்சர் சொன்னார். (இ-எ)

### சமய சந்நிதி

**முத்துமாரி அம்மன் ஆலயத்தில்**

யாழ்ப்பாணம், நவ.12

புளியங்குளம் ஸ்ரீமுத்து மாரியம்மன் ஆலயத்தில் ஐப்பசி கடைசி வெள்ளி அன்று (14-11-86) இரவு 'திருநீற்றின் பெருமை' என்னும் பொருள் பற்றி வித்துவான் மு. சபாரத்தினம் பேசுவார். (இ-எ)

**கண்ணகை மீனுட்சி அம்மன் கோயிலில்**

யாழ்ப்பாணம், நவ.12

எதிர் வரும் ஞாயிறு (16-11-86) ஊரெழு அந்திராணைப் பதி ஸ்ரீ கண்ணகை மீனுட்சி அம்மன் ஆலயத்திவ் பிற்பகல்திரு விளக்குப் பூசையும் சுமங்கலிப் பூசையும் நடைபெறும். (இ-எ)

**பிள்ளையார் கதை**

யாழ்ப்பாணம், நவ. 12

நெடுங்கேணி வில்வையளி விநாயகர் கோயிலில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பிள்ளையார் கதை படிக்கப்படும்.

தொடர்ந்து 21 நாட்கள் அபிஷேக பூசைகளும் நடைபெறும்.

21 ஆம் நாள் தீர்த்தோற்சவமும் கடைசியில் வீதி சுற்றுலாவும் இடம்பெறும். (இ-10)

### வாசகர் நிருபம்

## மன்னர் - சங்குப்பிட்டி பஸ்சேவை நெருக்கடி

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் மன்னார்ச்சாலை தற்போது மன்னாரிலிருந்து சங்குப்பிட்டிக்கு இரண்டு பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

இவை நாள்தோறும் காலை 5.30, 8.30 மணிக்கு மன்னாரிலிருந்து புறப்பட்டு சங்குப்பிட்டிக்கு வருகின்றன.

அச்சமயத்தில் கேரதீவிலிருந்து மன்னார் செல்லும் பயணிகள் சங்குப்பிட்டியில் காத்து நிற்பர். இவர்கள் மன்னாரிலிருந்து வரும் பஸ்ஸில் இருந்து பயணிகள் இறங்குவதற்கு முன்பே பஸ்ஸின் யன்னல் வழியாக தமது பொருள்களை உள்ளே வைக்கிறார்கள். அத்துடன் பயணிகளை இறங்கவிடாமல், தாங்கள் முண்டியடித்து ஏறுகிறார்கள்.

இதனால் பஸ்ஸிலிருந்து இறங்கவோ அல்லது ஏறவோ முடியாதநிலை ஏற்பட்டு, பெண்கள்,குழந்தைகள் உட்பட அனைவரும் இடிபட்டு, உதைபட்டு, மிதிபடுகிறார்கள்.

இதனால் சிறுகுழந்தைகள்கூட நசுக்கப்பட்டு உயிராபத்தும் ஏற்பட இடமுண்டு. இந்த நெருக்கடியை பஸ் காப்பாளராலும், நடத்துனராலும் கட்டுப்படுத்த முடிவதில்லை.

எனவே பஸ்ஸில் ஏறவிரும்பும் பிரயாணிகள் வரிசையாகவே நின்று, பஸ்ஸில் வந்த பயணிகள் அனைவரும் முற்றாக இறங்கிய பின்பே ஏற வேண்டும்.

தற்போது இப்பகுதிகளில் குடியியல் நிர்வாகம், போக்குவரத்து சீர்குலைந்திருப்பதால் புனித விடுதலை இயக்கங்கள் இச்சீர்கேட்டைச் சவனித்து, பயணிகள் நெருக்கடியில்லாமல் வரிசையில் நின்று ஏறத்தக்க உரிய ஒழுங்குகளைச் செய்து தருவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

வை. ச. ஆனந்தன்
மன்னர்.

* வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று ரூ. 5/- மட்டுமே!
* Processing Free
* விற்பனை வர்ண புகைப்படச் சுருள்கள்
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 2 3 6 2 8

# உதயன்

12 - 11 - 1986 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது!
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
* தரமான வர்ண நிழற்படப் பிரதிகள்
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
* துரித சேவையில்
பெற்றுக்கொள்ளலாம்.

## ஐக்கிய தாதிகள் சங்கம் யாழ்ப்பாணம் வரும்

கொழும்பு, நவ. 12
யாழ்ப்பாணத்துக்கு வந்து ஆஸ்பத்திரி நிலைமையை பார்வையிடும்படி அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்க யாழ். கிளைத் தலைவர் டாக்டர் எஸ். சிவக்குமாரன் விடுத்த அழைப்பை பொதுச் சேவை ஐக்கிய தாதிகள் சங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

இத்தகவலை சங்கத்தலைவரான வண. முருத்தெட்டுவ ஆனந்த தேரர் தெரிவித்தார்.

யாழ். வந்து திரும்பிய அரச வைத்திய அதிகாரிகள் சங்கத் தூதுக் குழு மூலம் இந்த அழைப்பு விடுக்கப்பட்டு இருந்தது.

யாழ் செல்லும் சங்கத் தூதுக் குழுவில் மூன்று உறுப்பினர்கள் இருப்பர் என்றும் அவர் சொன்னார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத் தூதுக் குழுவுக்கு யாழ்ப்பாணத்தில் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது என்றும் ஆனந்த தேரர் சொன்னார். (இ-எ)

## கோட்டை முகாம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளில் ஒருவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியின் உயர் அதிகாரிகளுக்கு தொலைபேசிமூலம் தெரிவித்தாராம்.

மீண்டும் சில மணி நேரத்தின் பின்னர் கோட்டை முகாமில் இருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு மற்றொரு தொலைபேசி அழைப்பு வந்தது.

பஸ் நிலையத்தில் இருந்து போராளிகள் தாக்குதல் மேற்கொள்வதாகவும்– நாம் பதிலடியாக ஷெல் தாக்குதலை மேற்கொள்ள இருப்பதனால் இப்பகுதிக்கு ஆஸ்பத்திரி ஊழியர்கள் பொது மக்களைச் செல்லவிட வேண்டாம் எனவும் தெரிவிக்கப்பட்டதாம்.

இதனால் ஏற்பட்ட பீதி காரணமாக நேற்று ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள கடைகள் அனைத்தும் மூடப்பட்டன.

வெளியில் நின்ற பார்வையாளர்கள் நேரத்துடன் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். (இ-10)

87 A/L DAY CLASS

பிரிவு III ஆரம்பமாகிவிட்டது.

| | | |
|---|---|---|
| Pure-Applied Maths | — | 10.30-12.30 |
| Zoology | — | 1.30- 2.30 |
| Botany | — | 2.30- 3.30 |
| Physics | — | 3.30- 4.30 |
| Chemistry | — | 4.30- 5.30 |

(எமது வழமையான ஆசிரியர் குழுவினால் கற்பிக்கப்படுகிறது.)

NEW MASTER INSTITUTE
B.M.C Lane, JAFFNA

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பதவி வெற்றிடம்

திருத்துனரும் இயக்குனரும்

வயது:- 25—45 வரை
கல்வித்தகைமை:– க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் சித்தி

அனுபவம்:– அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் நிறுவனமொன்றில் 5வருடத்திற்குக் குறையாமல் குளிரூட்டல் (Refrigeration) 3 பேஸ் மின்சாரம் (3Phase) ஆகிய துறைகளில் உடனடியாகப் பிழைகளைக் கண்டுபிடித்து திருத்தம் செய்யக் கூடிய வல்லமை இருத்தல்வேண்டும்.

சம்பள அளவுத் திட்டம்:-
350/- 615/-
15 X 7- 20 X8

எல்லாப்படிகளும் உட்பட ரூபா 1163/- விண்ணப்பங்கள் சுயமாகத் தயாரித்துப் பின்வரும் முகவரிக்கு 26. 11. 1986 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்

யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 12 - 11 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60; N 86

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தமிழ் போராளிகள் உதவுவர்

## இந்திய நாடாளுமன்றத்தில் இணை அமைச்சர் நம்பிக்கை

புதுடில்லி, நவ. 12
தமிழ்ப் போராளிகள் ஒன்றுபட்டு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவுவார்கள் என்று இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் நட்வர்சிங் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கைத் தமிழர் பற்றிய விசேட விவாத முடிவில் இணை அமைச்சர் பதிலளித்தார்.

இலங்கைத் தமிழர் நிலை குறித்து இந்தியா உன்னிப்பாக கவனித்து வருகிறது.

எப்படியும் சமரசத் தீர்வு கொண்டுவர இந்தியா முயற்சிக்கின்றது.

பெங்களூரில் பிரதமர் காந்தி-ஜனாதிபதி ஜெயவர்த்தனா சந்திப்பு முடியும் வரை அனைவரையும் பொறுத்திருக்கும்படி வேண்டுகிறோம்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும். இதுவே இந்தியாவின் கொள்கை.

இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காண முடியாது என்பதில் இந்தியா உறுதியாக இருக்கிறது.

இப்படி இணை அமைச்சர் நட்வர்சிங் மேலும் சொன்னார். (இ-எ)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 12
திரு. சசிபாரதியின் பத்திரிகைச் சேவையினையும், திரு நா. சுப்பிரமணிய ஐயர் கலாநிதிப் பட்டம் பெற்றமையையும் கௌரவிக்குமுகமாக ஒருபாராட்டுவிழா எதிர்வரும் சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறும்.

நல்லூர் இந்து விடுதியில் யாழ் இலக்கிய வட்டத்தின் ஆதரவில் நடைபெறும் இவ்விழாவுக்கு திரு. செம்பியன் செல்வன் தலைமை வகிப்பார்.

புலவர் பார்வதிநாதசிவம், மயிலங்கூடலூர் பி. நடராஜன், கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, சொக்கன் ஆகியோர் உரையாற்றுவார்கள். (இ-9)

## நேற்றிரவும் புலிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கின்றன.

நேற்று அதிகாலை 5-30 மணியிலிருந்து பொம்மர் விமானங்களும், 3 ஹெலிக்கொப்டர்களும் சீ பிளேன் உட்பட தாக்குதல்களை மேற்கொள்ளத் தொடங்கின. அதே சமயம் தொண்டமானாறு முகாமில் இருந்து வெளிவந்த இராணுவத்தினர் மீது 'கனன் சார்ஜ்' தாக்குதல் மேற்கொண்டதில் ஐந்து இராணுவத்தினர் வரை கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர்.

அதேபோல் பருத்தித்துறை முகாமில் இருந்து இராணுவத்தினர் முனை கைலாஸ் வரை வெளிவந்தனர். இவர்கள் மீதும் எமது வீரர்கள் நேரடி தாக்குதல் மேற்கொண்டதிலும் பல இராணுவத்தினர் காயமடைந்தனர். அதே போல் வல்வை முகாமிலிருந்தும் வெளிவந்த இராணுவத்தினருடனும் எமது வீரர்கள் நேரடிமோதல் நடத்தியவாறு உள்ளனர்.

கடற்படையினரின் தொடர்ச்சியான ஷெல் தாக்குதலையும், விமானப்படையினரின் ஹெலிகொப்டர்களினதும், பொம்மர்களினதும் குண்டு வீச்சையும், தொடர்ந்து போராடி எமது வீரர்கள் முறியடித்துக்கொண்டிருக்கின்றனர். சிலிண்டர் தாக்குதல், தொடர்ச்சியான நேரடி யுத்தம் இராணுவத்தினர் தரப்பில் பெரும் உயிர்ச்சேதங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன.

வடமராட்சியை முற்றாக நிர்மூலமாக்கும் முப்படையினரின் முயற்சியை முறியடிக்க எமது வீரர்கள் இறுதி மூச்சு வரை போராடிக்கொண்டிருக்கின்றனர்.

எம் மக்களை காக்கும் இப்போரில் தற்சமயம் வரை எமது 3 வீரர்கள் களப்பலியாகி யுள்ளனர். 5 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

வீரமரணமடைந்த (1)பட்டேல், தேவமுரளி (ரகுபதி பொலிகண்டி) (2) பவான் 2-ம் லெப்டினன்ட் (பஞ்சாட்சரநாதன் தொண்டமானாறு) (3) சிவன் (சிவகுமார் தொண்டமானாறு) ஆகியோருக்கு எமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவர்களில் பட்டேல், பவான் ஆகியோர் பருத்தித்துறை முகாம் ராணுவத்தினருடனான நேரடி மோதலிலும், சிவன் வல்வை ராணுவத்தினருடனான நேரடி மோதலிலும் வீரமரணமடைந்தனர். (அ

## பருத்தித்துறை--

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கோவில் அருகாமையில் பொம்மர் ஒன்று பல குண்டுகளைப் பொழிந்தது

பருத்தித்துறை தற்காலிக சந்தை அமைந்துள்ள மருதடிப்பகுதியிலும் பல குண்டுகளை பொம்மர் வீதியது. இதனால் வீதி பலத்த சேதத்துக்குள்ளானது.

இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களில் ஒன்றினால் பருத்தித்துறை கடற்கரையில் வசித்து தற்காலிகமாக பன்னங்கட்டையில் வசித்த 55வயதான தச்சுத் தொழிலாளி எஸ். அருளானந்தம் என்பவர் அவ்விடத்திலேயே பலியானார்.

பொம்மர் தாக்குதலில் மூன்றும் குறுக்குத்தெருப் பகுதியில் பல வீடுகள் தரைமட்டமாகின.

ஹெலிக்கொப்டர் வட்டமிட பருத்தித்துறை இராணுவமுகாமிலிருந்து சிப்பாய்கள் மூன்றும் குறுக்குத்தெரு வழியாக மக்கள் செறிந்து வாழும் பகுதியினுள் வரமுயன்றனர். ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தது. ஆழ்வாப்பிள்ளை அரிசி ஆலையும் சேதம் அடைந்துள்ளது.

நேற்றைய தாக்குதல்களின்போது பலர் காயமடைந்தனர், காயம் அடைந்தோரை இப்பகுதி இளைஞர்கள் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் (மந்திகை ஆஸ்பத்திரி) அவசர சிகிச்சைக்காக கொண்டு வந்து சேர்த்தனர்.

விவரம் வருமாறு:–

கா உமாபதி, (வயது 52) பருத்தித்துறை. ந. நவநீதமோகன் (வயது 24) புலோலி கிழக்கு, எஸ். கண்முகராசா (வயது26) மூன்றும்குறுக்குத் தெரு, கே. தங்கச்சி (வயது24) தும்பளை, எஸ். ராமு(வயது20) புலோலி எம். மணிவண்ணன் (வயது17) ஐயனார்கலட்டி திருமதி கே. நாகேஸ்வரி(வயது36) மூன்றும் குறுக்குத் தெரு, திருமதி மேரி ரெஜினா (வயது24) மூன்றும் குறுக்குத்தெரு, திருமதி. ரி, ஜெயராணி (வயது38) பன்னங்கட்டை, திருமதி. கே. தங்கராணி (வயது 34) வல்வெட்டித்துறை, செல்வன், தவராசசிங்கம் கிருபாகரன் (10மாதம்) மூன்றும்குறுக்குத் தெரு, என். கிருரேந்திரன், (வயது40) உடுவில் இவர் புலோலி உப அலுவலக தொழில் நுட்ப உத்தியோகத்தர் வேலைக்கு வரும்போது காயமடைந்தார்) எஸ். வெற்றிவேலாயுதபிள்ளை (வயது42) மந்திகை ஏ தவராசா(வயது33) மருதடி, வே. கருணாகரன் (வயது 25) பருத்தித்துறை, சி. எஸ். கிருஷ்ணலிங்கம் (வயது34) சாரையடி, இவர் இ. போ. ச. வில் ரிக்கெட் பரிசோதகர் கடமைக்குச் செல்லும் போது பொம்மர் குண்டு வீச்சுக்கு இலக்காகி காலில் பலத்த காயத்துக்குள்ளானார். (இ-118)

## இராணுவத்தினரை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஷெல்லினால் வீதித்தடை அகற்றப்படவில்லை.

வல்வெட்டித்துறையில் இராணுவத்துக்கும் போராளிகளுக்கும்இடையில் நடந்த மோதலில் போராளிகளுக்கு உதவ ஏனைய பகுதிகளில் இருந்து போராளிகளைச் செல்லவிடாது தடுக்கவே வீதித்தடையினை சிப்பாய்கள் ஏற்படுத்தியதாக நம்பப்படுகின்றது.

இராணுவத்தினர் வல்லைப் பாலம் வழியாக அச்சுவேலியை நோக்கி வருவதற்கு முயன்றபோது தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இராணுவத்தினரை நோக்கி எதிர்த்தாக்குதல் மேற்கொண்டனர்.

போராளிகள் தொடர்ந்து எதிர்த்தாக்குதல் மேற்கொண்டமையினால் இராணுவத்தினர் அச்சுவேலி நோக்கி முன்னேறுவதை விடுத்து இராணுவத்தினர் ஹெலிகொப்டரில் தொண்டைமானாறு இராணுவ முகாமிற்கு திரும்பினர்.

இதேநேரம் நண்பகல் அளவில் இரண்டு பொம்மர் விமானங்கள் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தன.

ஹெலிக்கொப்டர் தாக்குதலுக்கும் ஷெல் தாக்குதலுக்கும் பயந்து அச்சுவேலி வல்லை பிள்ளையார் கோவிலடி, அச்சுவேலி தெற்குப் பகுதியில் வாழும் மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி பெருமளவில் வெளியேறினர்.

காலையிலேயே தாக்குதல் சம்பவம் தொடங்கியதால் அச்சுவேலி பகுதி பாடசாலைகள் மூடப்பட்டன.

வடமராட்சிப் பகுதிக்கான வாகனப் போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்தது வடமராட்சி நோக்கி வந்த வாகனங்கள் பல ஆவரங்கால் சந்திக்கு அப்பால் வரிசையில் நிறுத்தப்பட்டிருந்தன. (அ-11-119)

## கல்வித் .

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கொத்தணிக்குப் பெருமை தேடித் தருவனவாக அமைகின்றன.

பல்வேறு புலமைப் பரிசில் திட்டங்களை உருவாக்கி மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் இவ் வித்தியாலயத்தின் முன்மாதிரி பெரிதும் பாராட்டற்குரியது என்று கூறினார்.

புங்குடுதீவு விளையாட்டுச் சங்கத்தலைவர் திரு. த. சங்கரராசா பேசுகையில் விளையாட்டுத்துறையில் புதிய சாதனைகளைப் படைக்க மாணவர்களைத் தூண்டவேண்டிய கடமை ஆசிரியர்களுக்கு உண்டு என்றார்.

பிரஸ்தாப வித்தியாலய அதிபர். திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் உப அதிபர், திரு. கே. ரி. தர்மலிங்கம், ஆசிரியர் திரு. ச. சதாசிவம், மாணவர் தலைவர் திரு. ந. ஸ்ரீதரன் ஆகியோரும் உரையாற்றினர். (இ-131)

## வல்வையில் சிப்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் இடம் பெற்றன.

இவற்றின் மத்தியில் இராணுவ முகாமைச் சுற்றிப் போராளிகள் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் கவனம் செலுத்தியபடி இருந்தனர்.

அந்த வேளை பெரும் எண்ணிக்கையில் சிப்பாய்கள் முகாமை விட்டு வெளியேற முயற்சித்தனர்.

அவர்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மோட்டோ ஷெல், 50 கலிபர் ஆயுதங்களைப் பயன்படுத்தி பதில் தாக்குதல் நடத்தினர்.

இதைத் தொடர்ந்து இராணுவத்தினர் பின்னடைந்தனர்.

### பொம்மர் குண்டு வீச்சு

பின்னர் பருத்தித்துறை பக்கமாக இருந்து வந்த பொம்மர் விமானம் அடுத்தடுத்து பல தடவை குண்டுகளை வீசியது.

இதில் இராணுவ முகாமை அண்டியுள்ள வீடுகள் பல சேதமடைந்தன. பொம்மர் தாக்குதல் பத்துமணி தொடக்கம் பதினொன்றரை மணி வரை இடம்பெற்றது.

அச்சமயத்தில் இராணுவ முகாமில் இருந்து 50 கலிபர் மோட்டோ ஷெல்களைப் பயன் படுத்திக் கொண்டு சிப்பாய்கள் வெளியே வந்தபோது புலிகள் 6 அங்குல மோட்டோ ஷெல், ரொக்கட் லோஞ்சர் போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தினர்.

### பல சிப்பாய்கள் மரணம்

அச்சமயம் பத்துக்கும் அதிகமான சிப்பாய்கள் தரையில் சாய்ந்தனர்

இதன் பின்னர் சிப்பாய்கள் முகாமுக்குத் திரும்பி ஷெல் தாக்குதலை மீண்டும் ஆரம்பித்தனர்.

முகாமின் கிழக்குப்பக்கமாக வெளியேறும் முயற்சி தோல்வியில் முடிவடையவே பிற்பகல் ஒரு மணியளவில் மேற்குப் பக்கமாக சிப்பாய்கள் வெளியேவர முயன்றனர்.

அப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் நேரடி மோதலில் ஈடுபட்டனர். இம் மோதலில் ஆயுதப் படையினர் தரப்பில் ஐந்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்று கூறப்பட்டது.

தொண்டமானாறு, வல்வை முகாம்களை இணைப்பதே இராணுவத்தினரின் நோக்கமாக இருந்ததால், ஹெலிக் கொப்டர் தாக்குதல், மோட்டோ ஷெல் தாக்குதல் ஆகியவற்றில் இராணுவத்தினர் நேற்று மாலையும் ஈடுபட்டு இருந்தனர். (இ-எ-160)

## மந்திகை ஆஸ்பத்திரி. .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தன.

மற்றும் வைத்தியசாலை நூலகம், செயலாளர் அலுவலகம், முதலாம் இரண்டாம் வார்ட்டுக்கள், டாக்டர் விடுதி ஆகியவையும் சேதம் அடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் ஹெலிக்கொப்டர் சுட்டதில் கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஆனந்த குமாரசாமியின் வீடும் சேதம் அடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-118)

## கடை தீப்பிடித்தது

யாழ்ப்பாணம், நவ 12
யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள கடை ஒன்றின் களஞ்சியப்பகுதி நேற்று முன்தினமிரவு திடீர் என தீப்பற்றி எரிந்தது.

இதன் காரணமாக கடைக்குள் இருந்த அலுமினியப் பொருள்கள் உட்பட பல பொருள்கள் எரிந்து நாசமாகின.

தீப்பிடித்ததற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை (இ-10)

## மரணமானோர் விவரம்

யாழ்ப்பாணம், நவ. 12
நேற்று பருத்தித்துறை வல்வெட்டித்துறை, வல்லை, பகுதிகளில் நடைபெற்ற இராணுவத் தாக்குதல்களின்போது காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு மரணமானோர் விவரம் வருமாறு:–

செபஸ்தியாம்பிள்ளை சயந்திரன் (20 வயது) அச்சுவேலி. தி. கண்ணன் (22 வயது) பருத்தித்துறை. எம். தேவா பருத்தித்துறை. (அ-10)

## சேதமடைந்த வீடுகள்

பலாலி, நவ. 12
நேற்று வல்லைவெளியில் இருந்து ஆவரங்கால் வரையும் இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட வீடுகள் விவரம்;

அருச்சுனன் என்பவரின் வீடு.

அருளானந்தம் என்பவரின் வீட்டுக் கூரை.

சண்முகம் என்பவரின் வீடு.

பசுபதி என்பவரின் வீட்டுக் கூரை.

புண்ணியர்என்பவரின் வீட்டுக் கூரை.

செல்வம் என்பவரின் வீட்டுக் கூரை.

வைரமுத்து என்பவரின் வீட்டுக் கூரையும் மாட்டுத் தொழுவமும்.

இவற்றுடன் வீதியில் குண்டு துளைத்தகுழிகள் பல தொடர்ச்சியாகக் காணப்படுகின்றன.

பல சைக்கிள்கள் அனாதரவாக அங்குமிங்கும் பலரால் விட்டுச்செல்லப்பட்டுள்ளன. (இ-119)

## இறுதிப் போட்டிகளும் பரிசளிப்பு விழாவும் இன்று நடைபெறுகின்றன

யாழ்ப்பாணம், நவ. 12
மாணவர் முன்னணி நடத்தியபாடசாலைகளுக்கிடையிலான மரதன் ஓட்டம், வலைபந்தாட்டம், உதைபந்தாட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு இன்று புதன்கிழமை பரிசுகள் வழங்கப்படும்.

இன்று மாலை 5-15 மணிக்கு யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் பரிசளிப்பு வைபவம் நடைபெறும்.

இதற்கு முன்னதாக இன்று உதைபந்தாட்ட, வலைபந்தாட்ட இறுதிப் போட்டிகள் காலை முதல் நடைபெற உள்ளன.

இன்று காலை 8-30 மணிக்கு திருக்குடும்ப கன்னியர் மடமும் (ஆங்கிலம்) உடுவில் மகளிர் கல்லூரியும் வலைபந்தாட்ட அரை இறுதிப் போட்டியில் மோதுகின்றன.

அதேநேரம் மற்றொரு திடலில் திருக்குடும்ப கன்னியர்மடமும்(தமிழ்) சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் மோதுகின்றன.

10-30 மணி அளவில் இரண்டாம் மூன்றும் இடத்துக்கான வலை பந்தாட்டப்போட்டி நடைபெறும்

பிற்பகல் 1-45 மணி அளவில் வலைபந்தாட்ட இறுதிப்போட்டி நடைபெறும்.

அதேபோன்றுபிற்பகல் 2-45மணி அளவில் இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரியும் யாழ்ப்பாணக் கல்லூரியும் முதலாவது ஆட்டம் ஒன்றில் மோதுகின்றன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியும் மாலை 4-00மணிக்கு மற்றொருஆட்டத்தில் மோதுகின்றன. (இ)

## ஹெலி--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறு:–

நாகையா சுந்தரலிங்கம் (30 வயது)

மண்டானுக்கு சுருட்டுத் தொழிலுக்காகச் சென்றவர், முதுகில் காயம்.

இ. குணராசா (வயது 35) காலில் காயம் (சீவல் தொழிலாளி)

செல்லையா சந்திரன் (22 வயது) சகோதரனைப் பார்க்க வந்த வழியில் காயப்பட்டார்.

திருமதி தவராசா புவனேஸ்வரி (30 வயது)

திருமேனி சத்தியமூர்த்தி (17 வயது) காலில் காயம்.

செல்வராசா ஜெயச்சந்திரராசாஇடுப்பு, கை, கால் என்பவற்றில் காயம்.

சின்னத்துரை கணேசு (23 வயது) புத்தூரைச் சேர்ந்தவர்.

மீன் வியாபாரி, மீன் வாங்க வல்வெட்டித் துறைக்குச் சென்று வந்தவர்.

செல்லன் மகேந்திரன் (24 வயது) புத்தூரைச் சேர்ந்த மீன் வியாபாரி, மீன் வாங்கவர வல்வெட்டித் துறைக்குச் சென்றவர்.

(இ. 119)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org